ந.க. எண். 24290/2019/பஅ4 நாள் /01/2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

திருவள்ளூர் மாவட்டம்

**இணையதள அறிவிக்கை (NOTIFICATION)**

**சாலை ஆய்வாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்**

திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | - | சாலை ஆய்வாளர் |
| 2. | பணியின் தன்மை | - | ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலும், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ) / ஒன்றியப் பொறியாளரின் அறிவுரைப்படி செயல்படுதல், ஒதுக்கப்படும் சாலை மேம்பாட்டு பணிகளை மேற்பார்வையிடல் / கான்கீரிட் போடுவதை கண்காணித்தல் மற்றும் வேலைகள் குறித்த அறிக்கைகள் சமர்ப்பித்தல். |
| 3. | ஊதியம் | - | ரூ.19500-62000 என்ற ஊதிய அட்டவணையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| 4. | வயது | - | 2020 ஜூலை மாதம் 1ம் தேதி அன்று 35 வயதிற்கு மிகாதவராக இருத்தல் வேண்டும். |
| 5. | மொத்த காலிபணியிடங்கள் | - | 7 |

| | | | |
|---|---|---|---|
| 6. | இடஒதுக்கீடு விவரங்கள் | - | (see table below) |

| | |
|---|---|
| **Back Log Vacancy** | |
| MBC/DNC | 1 |
| SC (Women– Destitute Widow) | 1 |
| Subtotal | 2 |
| **Regular Vacancy** | |
| General Turn (Ex-servicemen) | 1 |
| SCA | 1 |
| MBC/DNC | 1 |
| BC (Other than backward class muslims) | 1 |
| BC (Other than backward class muslims) (Women ) | 1 |
| Sub Total | 5 |
| **Total Vacancy** | **7** |

| | | | |
|---|---|---|---|
| 7. | கல்வித் தகுதி | - | ஐ.டி.ஐ (கட்டுமான வரைதொழில் அலுவலர்) சான்றிதழ் (ITI CIVIL DRAUGHTSMAN) கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும். இதற்கான கல்வியினை முழு நேர (Regular) படிப்பு முறையில் மட்டுமே பெற்றிருக்க வேண்டும். தொலைதூர கல்வி முறை (Distance Mode) மற்றும் பகுதி நேர படிப்பு (Part Time) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. |
| 8. | கடைசி நாள் | - | **25/02/2020** பிற்பகல் **5.45** மணி வரை |

<u>நிபந்தனைகள்:-</u>

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
3. விண்ணப்பப்படிவத்தில் உள்ள விபரங்களை முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

4. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. எந்த ஒரு விண்ணப் பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.
7. அரசு விதிகளின்படி இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப் பிரிவு)–க்கு அலுவலக வேலை நாட்களில் காலை **10.00** மணி முதல் மாலை **5.45** மணி வரை நேரிலோ அல்லது மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சிப் பிரிவு), திருவள்ளூர் என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ **25/02/2020** (செவ்வாய் கிழமை) அன்று பிற்பகல் **5.45** மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களுக்கு எழுத்துத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து தேர்வு நுழைவுச்சீட்டு **(Hall Ticket)** அனுப்பி வைக்கப்படும்.

சாலை ஆய்வாளர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரகத்திலும், தேசிய தொழில் நெறி வழிகாட்டு மையத்திற்கான (National Career Serivce Portal) (www.ncs.gov.in) என்ற இணைணதளத்திலும் மற்றும் திருவள்ளூர் மாவட்ட இணையத்தளத்திலும் (www.tiruvallur.nic.in) என்ற இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவள்ளூர் மாவட்டம்.

24/01/2020